

"குற்றத்தை வெறு குற்றவாளியை அல்ல"

- மகாத்மா காந்தி



# வீரப்பன் வழக்கில் கர்நாடக, தமிழக சிறைகளில் 32 ஆண்டுகளாக சிறையில் வாடுவோர் விடுதலை கோரி கருத்தரங்கு

**நாள் : 12.02.2021 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணி**

**இடம் : M.கல்யாணசுந்தரம் இல்லம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம், 15, கருப்பண்ண வீதி, சூரம்பட்டி நால்ரோடு அருகில், ஈரோடு.**

சிறையில் வாடும் மனிதர்களின் துயரங்கள் ஒரு போதும் நமது கவனங்களுக்கு வருவதில்லை. நமது நினைவுகளில் அது நிலைப்பதில்லை. வீரப்பன் தொடர்புடைய வழக்கில் இன்னமும் தமிழகம் மற்றும் கர்நாடக சிறைகளில் வாடும் சிறைவாசிகளின் விடுதலை மனித உரிமை சார்ந்த கோரிக்கையாகும்.

கடந்த 1993 ஆண்டு கர்நாடக மாநிலத்தில் பாலாறு என்ற இடத்தில் நிகழ்ந்த மோதல் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட தடா வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள் பத்து ஆண்டுக்கு மேலாக சிறையில் வாடினர். அவர்களில் சைமன், பிலவேந்திரன், ஞானப்பிரகாசம், மீசை மாதையன் ஆகியோருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் உச்சநீதிமன்றம் மரண தண்டனை வழங்கியது. அதன் பிறகு மீண்டும் ஆயுள் தண்டனை உறுதியானது. இதில் ஏற்கனவே சைமன், பிலவேந்திரன் சிறையிலேயே மரணமடைந்துவிட்டனர். சிறையில் வாடும் ஞானப்பிரகாசம், மீசை மாதையன் சுமார் 27 ஆண்டுகளாக தனிமைச் சிறையில் வாடுகின்றனர். ஆதரவற்ற அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்.

வீரப்பனின் சகோதரரான மாதையன் மற்றும் அவருடன் சேர்ந்து பெருமாள், ஆண்டியப்பன் ஆகியோர் கடந்த 1990 ஆண்டு கர்நாடக காவல்துறையால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். பின்னர் தமிழகத்தில் இருந்த ஒரு கொலை வழக்கில் 1994 ஆண்டு சேர்க்கப்பட்டனர். இவ்வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. கடந்த 32 ஆண்டுகளாக சிறையில் வாடுகின்றனர். அனைவரும் கடும் நோயாளிகள்.

ஆயுள் சிறைவாசத்தை சுமார் 14 ஆண்டுகளுக்கு பின்னர் விடுவிக்கும் அதிகாரம் அரசுக்கு உண்டு. இந்த அதிகாரத்தை பயன்படுத்தி இவர்களை அரசு விடுவிக்க வேண்டும். இவர்களின் விடுதலையை காலம் தாழ்த்துவது அப்பட்டமான மனித உரிமை மீறல். இவர்கள் எஞ்சிய சிறிது காலத்தையேனும் தங்கள் குடும்பத்தாரோடு வாழ்ந்து செல்ல அரசு உதவ குரல் கொடுப்போம். இந்த மனிதாபிமான கோரிக்கையை வழியுறுத்தி நடக்கும் கருத்தரங்கில் பங்கேற்க வாருங்கள்



**பழிவாங்குவதைக் காட்டிலும்**
**கருணை காட்டுவதன் மூலம் மட்டுமே கூடுதலாக சாதிக்க முடியும்**

- நெல்சன் மாண்டேலா

## பங்கேற்போர்

தலைமை : திரு. **வி.பி.குணசேகரன்** தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கம்

கருத்துரை : திருமதி. **P.சுப்புலட்சுமி ஜெகதீசன்,** தி.மு.க. முன்னாள் மத்திய அமைச்சர்

தோழர். **கொளத்தூர் மணி,** தி.வி.க.

தோழர். **ஹென்றி டிபேன்,** மக்கள் கண்காணிப்பகம்.

திரு. **மெகபூப் பாட்சா,** சோக்கோ அறக்கட்டளை.

திரு. **ப.பா.மோகன்,** மூத்த வழக்குரைஞர், சி.பி.ஐ.

டாக்டர். **V.ஜீவானந்தம்** தமிழக பசுமை இயக்கம்

திரு. **K.R.திருநாவுக்கரசு,** சி.பி.ஐ. ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளர்

திரு. **ச.பாலமுருகன்,** பி.யு.சி.எல். வழக்குரைஞர், கோவை.

திரு. **பிலிப்ஸ் மேத்யு,** சிகரம் அமைப்பு, பெங்களூர்

திரு. **பாபுராஜ் பல்லடன்** வழக்குரைஞர் மற்றும் இயக்குனர்,
பீப்பல்ஸ் லீகல் போரம், மைசூர்

திரு. **ம.கந்தசாமி,** வழக்குரைஞர், ம.தி.மு.க.

திரு. **கண.குறிஞ்சி,** பி.யு.சி.எல். மாநில தலைவர்

திரு. **சு.மோகன்குமார்,** சி.பி.ஐ.

திரு. **சி.சே.இராசன்,** சமம் குடிமக்கள் இயக்கம்.

திரு. **இளங்கோவன்,** தமிழ் தேசிய பேரியக்கம், கருங்கல்பாளையம்.

திரு. **ஜான் வின்சென்ட்,** வழக்குரைஞர், மதுரை.

திரு. **இர.கருணாநிதி,** வழக்குரைஞர் மதுரை.

திரு. **M.S.கிருஷ்ணகுமார்,** வழக்குரைஞர், சி.பி.ஐ.

திரு. **U.A.அன்புராஜ்,** தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கம்.

### மனித உரிமைக்கு குரல் கொடுப்போம் வாருங்கள்

ஒருங்கிணைப்பு :

**தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கம், மக்கள் சிவில் உரிமைக்கழகம்.**

செல் : 94427 55120, 94432 13501, 99422 88151.